*பிரசார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை-4*
*05 12 2025 FRIDAY 12 40 PM*
*ஆகாஷவாணி-செய்திகள்*

*தலைப்புச் செய்திகள்*

1. ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புட்டின் மற்றும் பிரதமர் திரு. நரேந்திர மோடி இடையிலான இருதரப்பு பேச்சுக்கள் புதுதில்லியில் சற்றுமுன் தொடங்கியது.

2. திருப்பரங்குன்றம் விவகாரத்தில், தமிழக மக்களின் வழிபாட்டு உரிமையை திமுக அரசு மறுப்பதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் குற்றம் சாட்டியுள்ளார்.

3. வங்கிகளுக்கான ரெப்போ வட்டி விகிதத்தை ரிசர்வ் வங்கி புள்ளி இரண்டு ஐந்து சதவீதம் குறைத்துள்ளது.

4. தெற்காசிய மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் வெள்ளம் மற்றும் நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கான நிவாரணத்தை விரைந்து அனுப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஐ.நா தெரிவித்துள்ளது.

5. உலகக் கோப்பை ஜூனியர் ஹாக்கி போட்டியின் காலிறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று பெல்ஜியத்தை எதிர்கொள்கிறது.

>>>>>><<<<<<

ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புட்டின் மற்றும் பிரதமர் திரு. நரேந்திர மோடி இடையிலான இருதரப்பு பேச்சு புதுதில்லியில் சற்றுமுன் தொடங்கியது.

முன்னதாக, ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புட்டினுக்கு குடியரசுத்தலைவர் மாளிகையில் இன்று சிவப்பு கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது.

>>>>>><<<<<<

குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, பிரதமர் திரு. நரேந்திர மோடி உள்ளிட்டோர் ரஷ்ய அதிபரை வரவேற்றனர்.

ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புட்டினுக்கு, இன்று மாலை குடியரசுத்தலைவர் சிறப்பு விருந்து அளிக்கவுள்ளார்.

>>>>>><<<<<<

மக்களவையிலும், மாநிலங்களவையிலும், திருப்பரங்குன்றம் விவகாரம் குறித்து விவாதிக்க கோரி, திமுக சார்பில் அளிக்கப்பட்ட ஒத்தி வைப்பு தீர்மானம், இரு அவைகளிலும் நிராகரிக்கப்பட்டது.

இன்று காலை இரு அவைகளும் தொடங்கியவுடன், தாங்கள் அளித்த ஒத்தி வைப்பு தீர்மானத்தை ஏற்று, இப்பிரச்சினை குறித்து விவாதம் நடத்த வேண்டும் என்று வலியுறுத்தி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டனர்.

இதன் காரணமாக, மக்களவை நண்பகல் 12 மணி வரை ஒத்தி வைக்கப்பட்டது. பின்னர் அவை கூடியதும் திமுக உறுப்பினர் திரு. டி.ஆர்.பாலு, இப்பிரச்சினையை எழுப்பினார்.

அப்போது குறுக்கிட்டுப் பேசிய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், தொன்றுதொட்டு திருப்பரங்குன்றம் மலையில் தீபம் ஏற்றும் நடைமுறை இருந்து வந்துள்ளதாக தெரிவித்தார்.

மாநிலத்தை ஆளும் திமுக அரசு நீதிமன்ற உத்தரவை மீறி செயல்பட்டதாக அவர் குற்றம் சாட்டினார்.

தமிழக மக்களின் வழிபாட்டு உரிமையை மாநில அரசு மறுப்பதாகவும் டாக்டர் எல். முருகன் தெரிவித்தார்.

மாநிலங்களவையில் ஒத்தி வைப்பு தீர்மானம் ஏற்கப்படாததை அடுத்து, திமுக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்பு செய்தனர்.

>>>>>><<<<<<

UMEED இணையதளத்தில் இதுவரை ஒரு லட்சத்து 51 ஆயிரம் வக்ஃப் சொத்துகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக மத்திய சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜூ தெரிவித்துள்ளார்.

*புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த UMEED இணையதளத்தில், வக்ஃப் சொத்துக்களை பதிவு செய்ய இன்று கடைசி நாள் என்று குறிப்பிட்டார்.*

*மேலும், லட்சக்கணக்கான வக்ஃப் சொத்துக்கள் இந்த இணையதளத்தில் பதிவு செய்யாமல் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.*

*இந்த இணையதளத்தில் பதிவு செய்யாத சொத்துக்கள் மீது அடுத்த 3 மாதங்களுக்கு, அரசு அபராதம் விதிக்காது என்று கூறிய திரு. கிரண் ரிஜிஜூ, UMEED இணையதளத்தில் பதிவு செய்யாதவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.*

*>>>>>><<<<<<*

*வங்கிகளுக்கான ரெப்போ வட்டி விகிதம் புள்ளி இரண்டு ஐந்து சதவீதம் குறைக்கப்பட்டுள்ளதாக ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு. சஞ்சய் மல்கோத்ரா தெரிவித்துள்ளார்.*

*மும்பையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், ரிசர்வ் வங்கி நடப்பாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீட்டை 6 புள்ளி எட்டு சதவீதத்திலிருந்து 7 புள்ளி மூன்று சதவீதமாக உயர்த்தியுள்ளதாகவும் கூறினார்.*

*நுகர்வோர் குறியீட்டு அடிப்படையிலான பணவீக்க விகிதமும் இரண்டு புள்ளி ஆறு சதவீதத்திலிருந்து இரண்டு சதவீதமாக குறையும் என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாகவும் திரு. சஞ்சய் மல்கோத்ரா தெரிவித்தார்.*

*>>>>>><<<<<<*

*இந்தியா - ஓமன் இடையே இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான 14வது சுற்று ஆலோசனைக் கூட்டம் மஸ்கட்டில் நடைபெற்றது.*

*இக்கூட்டத்தில் இந்தியா சார்பில் தூதரக செயலர் திரு. அருண்குமார் சாட்டர்ஜி-யும், ஓமன் நாட்டின் வெளியுறவு அமைச்சக அதிகாரி திரு. Sheik Kalifa-வும் கலந்து கொண்டனர்.*

*அரசியல், பாதுகாப்பு, வர்த்தகம், எரிசக்தி, வேளாண்மை, கல்வி, கலாச்சாரம் உள்ளிட்ட துறைகளிலும், இருநாட்டு மக்களுக்கு இடையிலான தொடர்பை வலுப்படுத்தவும்*

மேற்கொள்ளப்படும் கூட்டு முயற்சிகள் தொடர்பாக இந்த ஆலோசனைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

உலக மற்றும் மண்டல அளவிலான இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்கள் குறித்தும் இரு நாட்டு அதிகாரிகளும் விவாதித்தனர்.

இந்தியா – ஓமன் இடையேயான நட்புறவு தொடங்கி, 70 ஆண்டுகள் நிறைவடையும் நிலையில், இருநாடுகளுக்கும் இடையேயான வர்த்தகம் மற்றும் கலாச்சார தொடர்புகள் வரலாறு காணாத அளவில் மேம்பட்டிருப்பதாக இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

கடந்த நிதியாண்டில். இருதரப்பு வர்த்தகம் 10 புள்ளி ஆறு ஒன்று பில்லியன் டாலர் அளவுக்கு உயர்ந்துள்ளதையும் அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

ஓமனில் 6 லட்சத்து 75 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இந்தியர்கள், இருநாடுகளுக்கும் இடையிலான உறவுப் பாலத்தை வலுப்படுத்தியுள்ளதாகவும் இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

15வது சுற்று, இருதரப்பு ஒத்துழைப்புக்கான அடுத்த ஆலோசனைக் கூட்டம் வரும் ஆண்டு புதுதில்லியில் நடத்துவது எனவும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

>>>>>><<<<<<

தெற்காசிய மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் வெள்ளம் மற்றும் நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கான நிவாரணத்தை விரைந்து அனுப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஐ.நா தெரிவித்துள்ளது.

இலங்கையில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் நிவாரணப் பணிகளை ஆய்வு செய்த ஐ.நா செய்தி தொடர்பாளர், இந்த நாடுகளில் மழை வெள்ளத்தில் ஆயிரத்து 500-க்கு மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாகவும், 11 மில்லியன் பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

வியட்நாமில் மழை வெள்ளத்தால் மோசமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு தங்குமிடம், உணவு, தண்ணீர், மருத்துவ வசதி போன்றவற்றிற்கு 2 புள்ளி ஆறு மில்லியன் டாலர் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

*இதேபோன்று இந்தோனேஷியாவில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் நிவாரண மற்றும் மறுவாழ்வுப் பணிகளுக்கும் ஐ.நா போதிய நிதியை ஒதுக்கீடு செய்யும் என்று ஐ.நா செய்தி தொடர்பாளர் கூறினார்.*

*>>>>>><<<<<<*

*மத்திய அரசின் தொழில் பழகுநர் பயிற்சி அபிவிருத்தி திட்டத்தின் கீழ், இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.*

*தமிழகத்தின் விழுப்புரம் மாவட்டத்தில் மத்திய மாநில அரசு நிறுவனங்களில் பணியாற்றும் இளைஞர்கள் மற்றும் ஐடிஐ பயிற்சி முடித்த இளைஞர்களுக்கு இந்த பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் இதனை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் எது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*(வாய்ஸ் பைட் - சுரேஷ் 35 செகண்ட்ஸ்)*

*>>>>>><<<<<<*

*சட்டவிரோத பணப்பரிவர்த்தனை மற்றும் வங்கி மோசடி தொடர்பான வழக்குகளில், ரிலையன்ஸ் அனில் அம்பானி குழுமத்தின ஆயிரத்து 120 கோடி ரூபாய் மதிப்பிலான சொத்துக்கள் மற்றும் வங்கிக் கணக்குகளை அமலாக்க இயக்குநரகம் முடக்கியுள்ளது.*

*இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் இதுவரை, 10 ஆயிரத்து 117 கோடி ரூபாய் மதிப்பிலான சொத்துக்கள் முடக்கப்பட்டுள்ளதாகவும் அமலாக்க இயக்குநரகம் தெரிவித்துள்ளது.*

*>>>>>><<<<<<*

*ஜம்மு கஷ்மீர் எல்லைப் பகுதியில், பாகிஸ்தானிலிருந்து போதைப்பொருளை கடத்தி வந்த 6 தீவிரவாதிகளை காவல்துறையினர் கைது செய்தனர்.*

*அவர்களிடமிருந்து 30 கோடி ரூபாய மதிப்பிலான, 5 கிலோ போதைப்பொருள் மற்றும் ஆயுதங்களும் பறிமுதல் செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*>>>>>><<<<<<*

*இந்தியா - கனடா இடையேயான பாதுகாப்பு மற்றும் சட்டரீதியிலான ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து, கனடாவிற்கான இந்திய தூதர் திரு. தினேஷ் பட்நாயக், கனடாவின் உள்துறை அமைச்சர் Gary Anandasangaree-யுடன் ஆலோசனை நடத்தியுள்ளார்.*

*இருநாடுகளுக்கு இடையிலான இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான வாய்ப்புகள் குறித்தும் அப்போது விவாதிக்கப்பட்டது.*

*இதுதொடர்பாக Ottawa-வில் உள்ள இந்திய தூதரகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், சுரங்கத் துறையில் பரஸ்பரம் இருநாடுகளிலும் முதலீடு செய்வது, கனிமவளம் மற்றும் எரிசக்தி துறையில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது, தொழில்நுட்ப ஒத்துழைப்பு உள்ளிட்ட முக்கிய விஷயங்கள் குறித்து இருதரப்பிலும் விவாதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*>>>>>><<<<<<*

*உலகக் கோப்பை ஜூனியர் ஹாக்கி போட்டியின் காலிறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று பெல்ஜியத்தை எதிர்கொள்கிறது.*

*சென்னையில் இப்போட்டி இரவு 8 மணிக்கு தொடங்குகிறது.*

*>>>>>><<<<<<*

*உலகக் கோப்பை ஜூனியர் மகளிர் ஹாக்கி போட்டியில் இந்தியா இன்று அயர்லாந்தை எதிர்கொள்கிறது.*

*சிலியின் சாண்டியாகோவில் இப்போட்டி, மாலை மணி 5.30-க்கு நடைபெறவுள்ளது.*

*>>>>>><<<<<<*

*நைரோபியில் நடைபெற்ற சர்வதேச டேக்வாண்டோ சாம்பியன் போட்டியில் இந்தியாவின் நிதிஷ் சிங் வெண்கலப்பதக்கம் வென்றார்.*

*21 வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.*

*>>>>>><<<<<<*

***சையத் முஷ்டாக் அலி கோப்பைக்கான டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில், தமிழக அணி 61 ரன் வித்தியாசத்தில் திரிபுரா அணியை வென்றது.***

*>>>>>><<<<<<*

***சென்னையில் நடைபெற்று வரும் சர்வதேச ஸ்குவாஷ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்தியாவின் அனஹத் சிங் இன்று ஜோஷ்னா சின்னப்பாவை எதிர்கொள்கிறார்.***

*>>>>>><<<<<<*